பரப்பிர

ரூர் பிரம்மஞ்ஞான பத்திராதிபர் மகா-ள-ள-ஸ்ரீ

ஏ. ராமய்யர் அவர்களால் பிரசுரிக்கப்பட்டது.

வேண்டியவர்கள் திருவாரூர் பிரம்மஞ்ஞான பத்திராதிபர்

மகா-ள-ள-ஸ்ரீ ஏ ராமைய்யர் அவர்களிடமிருந்து

பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை அணா 1.

Printed by V. Govindan & Brothers, Tanjore.

1908.

Reprinted from Brahmagnana Patrika Tiruvalur (250 Copeis.)

இறைவன் துணை.

# கௌமார குருகுலம், மன்னார்குடி.

## படிப்பவர்கள் கவனிக்க வேண்டியவை.

1 **படிப்பது எப்படி.** நாவல், கதைகள், மனஉற்சாகத்திற்கும் காலப்போக்குக்கும்படிப்பது. கைத்தொழிலைப்பற்றிய நூல்கள், தேசசரித்திரம், பெரியோர் வாழ்க்கை சரித்திரம், முதலியன அறிவு வளர்ச்சிக்காகப் படிப்பது. இவைகளை ஒரு தரத்திற்கு இரண்டு தரம் கவனத்துடன் படிக்கவேண்டும். தேவாரம் திருவாய்மொழி குறள் கீதை முதலிய நூல்கள் பக்தி ஞானம் ஒழுக்கம் உண்டாவதற்குப் படிப்பது. அவைகளை பல முறைஆழ்ந்து படிப்பதுடன் பாராயணமும் செய்யவேண்டியது.

2 **படித்து சீக்கிரம் திருப்பிக்கொடுக்கவும்.** புத்தகங்கள் படிப்பதற்காகவே உள்ளன என அறியவேண்டியது அவசியம். ஆதலால் படிக்காமல் நாம் வைத்திருந்தால் மற்றவர்கள் படிப்பதைத் தடைசெய்யும் பழிக்கு உள்ளாகிறோம்.

3 **படித்த புத்தகங்களைப்பற்றி நண்பர்களுக்குச் சொல்லவும்.** இன்ன இன்ன புத்தகம் இருக்கிறது எனவும் அவைகளில் விசேஷங்கள் இன்னவை எனவும் மற்றவர்களுக்கும் தெரிவித்தால் அவர்களும் நம்மைப்போல் படித்து ஆனந்திப்பார்கள்.

4 **புத்தகங்களை நன்றாய்க் காப்பாற்றவும்.** படிக்கும் போது எண்ணை ஈரம் அழுக்கு இல்லாத கையால் எடுத்துப் படிக்கவும்; சுத்தமான இடத்தில் வைக்கவும்; ஏடுகளை மடிக்காமல் கிழிக்காமல் எழுதாமல் காப்பாற்றவும். அடையாளம் வைக்க வேண்டுமானால் ஒரு காகிதம், நூல், ஓலையால் செய்க. வாங்கும் போது பார்த்து கெடுதல் இருந்தால் தெரிவித்து, வாங்கினவர்களிடம் திருப்பிக் கொடுக்கவேண்டியது முறை. கொடுக்கும் போது காண்பித்துக் கொடுக்கவும்.

5 **படிப்பவர்கள் ஜாப்தாவில் பதிவு செய்யவும்.** ஒவ்வொரு புத்தகத்துடனும் ஒரு அச்சிட்ட ஜாப்தா கொடுக்கப்படுகிறது. அதில் படிப்பவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் ஊர் பெயர் வாங்கி கொடுத்த தேதியை எழுதவும்.

6 **இனி வேண்டிய புத்தகத்தைத் தெரிவிக்கவும்.** படித்த புத்தகங்கள் போக இனி படிக்க ஆசைப்பட்ட புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம். கையில் இல்லாவிட்டால் கூடிய ஏற்பாடு செய்கிறோம்.

கௌமாரகுருகுலம்
7—1—1932

**மா. இராமலிங்கம் பிள்ளை,**
காரியதரிசி.

ஓம்தத்ஸத்.

# பிரம்மஞ்ஞானம்.

## பரப்பிரம்மும் அதன் வியக்தாவஸ்தைகளும்.

சென்றதாயும் நடக்கின்றதாயும் நடக்கப்போகிறதாயுமுள்ள திரிகாலங்களிலேயும் சகல விடங்களிலும் வியாபித்துக் கொண்டும் ஸமஸ்த ஜீவராசிகளுக்கும் அசேதனங்களுக்கும் ஆதாரமாயும் குணரகிதமாயும் ஸத்சித் ஆனந்தஸ்வரூபராயும் மனோவாக்குக்காயங்களுக்கு எட்டாதவர்ாயும் சுத்த ஞானஸ்வரூபராயும் ஸகல உலகங்களேயும் பிரகாசிப்பிக்கிறவராயும் சூரியன் சந்திரன் மின்னல் முதலியவைகளிடம் தோன்றும் தேஜவிற்கு ஆதார பூதராயும் ஆனல் ஸ்வயத்தில் ஆதாரமற்றவராயுமுள்ள ஓர் பொருள் இருக்கவேண்டுவது அவசியம். அப்படியிருக்கிற தென்பதை கேவலம் மனதுமுதலிய இந்திரியங்களால் சிந்திப்பதற்கு அஸாத்தியமானலுங்கூட, அதனிடத்துத் தோன்றியிருக்கும் அநேக வியக்தப்பொருள்களின் குணங்களால் இவ்விதமிருக்கவேண்டுமென்பதை ஊகிக்கலாம். வியக்தமென்றும் சொல்லும்பொழுதே அவ்வியக்தம் ஒன்று இருக்கிறதென்று ஸித்திக்கிறது. ஜ்வலித்துக்கொண்டிருக்கிற நெருப்பிலிருந்து ஸதிருசங்களான அநேகம்பொறிகள் எப்படி வெளிக்கிளம்புகின்றனவோ அதைப்போலவே பரப்பிரம்மத்தினிடமிருந்து அநேக ஜீவகோடிகள் உண்டாகி அதனிடத்திலேயே லயமடைகின்றன. எப்படி சூரியனிடத்திலிருந்து உதயத்தில் அநேக ஸதிருச கிரணங்கள்தோன்றி அஸ்தமனத்தில் அதனிடத்திலேயே லயத்தையடைகின்றதோ அதைப்போலவே சகல ஜீவர்களும் அப்பரப்பிரம்மத்தினிடமிருந்து உண்டாகி அதனிடத்திலேயே லயத்தையடைகிறர்கள். எப்படி ஸமுத்திரத்தினிடமிருந்து அநேக அலைகள் தோன்றி மறுபடியும் ஸமுத்திரத்திலேயே லயத்தை யடைகிறதோ அதைப்போலவேஸமஸ்தமும் பரப்பிர்ம்மத்தினிடமிருந்து உண்டாகி அதினிடத்திலேயே லயமடைகின்றன. ஆனல் ஸமுத்திரத்திலிருந்து உண்டாகப்பட்ட அலைகளும் நுரைகளும் எப்படி உண்மையில் சமுத்திரஜலத்தைவிட

வேறன்றோ ஆனால் அதனுடைய மாறுதல் அதாவது விகாரமோ அதைப்போலவே ஸகலவியக்தப்பொருள்களும் அப்பரப்பிரம்மத்தின் விகாரமேயல்லாது வேறன்று. அவ்வியக்த நிலைமையில் பரப்பிரம்மமென்றும் வியக்த நிலைமையில் ஸ்ரீமந்நாராயணனென்றும் ஸ்ரீமகாதேவனென்றும் சொல்வதுண்டு. எவ்விதநாமத்தோடு ஜனங்கள் பேரிட்டழைத்தாலும் பாதகமில்லை பரப்பிர்ம்மமே வியக்தமான புருஷனாக தோன்றினார் என்று கிரகித்தால் போதுமானது. இந்த வியக்தாவஸ்தைக்கு அபரப்பிர்ம்மமென்றும் புருஷோத்தமனென்றும் சொல்வதுண்டு. அப்படி வியக்தமாகவேண்டியதற்கு காரணம் அப்பரப்பிர்ம்மத்தைத் தவிர நமக்குத்தெரியாது. ஆனால் தைத்திரியோபநிஷத் ஆநந்தவல்லிற் சொல்லியபடி அந்த பரமாத்மா அநேகமாக ஆகக்கடவேன். உண்டாகக்கடவேன் என்று இச்சித்து ஆலோசனைசெய்து சகலத்தையும் சிருஷ்டித்து அவைகளுக்குள் பிரவேசித்து சேதனா சேதனாத்மகமாயும் உருவமுள்ள வஸ்துக்களாயும் உருவமில்லாத வஸ்துக்களாயும் பெயரிடப்பட்டவஸ்துக்களாயும் பெயரிடப்படாதவஸ்துக்களாயும் அறிவுள்ளவஸ்துவாயும் அறிவில்லாத வஸ்துவாயும் ஆயிற்று. "அநேகமாக ஆகக்கடவேன்" என்றதை பிரம்மஸங்கல்பமென்று சொல்லுவார்கள். அந்த ஸங்கல்பமுண்டாயிற்றென்றால் பிரம்மத்திலிடம் சில சலனங்கள் உண்டாயிற்றென்று கொள்ளத்தக்கது. அக்காலத்திற்கே பிரவிர்த்திகாலமென்று மன்வந்தர மென்றும் பலவாறாகச் சொல்லுவதுண்டு. சங்கல்பமற்றிருக்குங்காலத்தில்தான் பிரம்மத்தில் ஸ்திரத்தன்மை யேற்படுகிறது. அதற்கு நிவர்த்திகாலமென்றும் பிரளயகாலமென்றும் இராக்காலமென்றும் சொல்வது வழக்கம். ஸமஸ்தங்களும் உண்டாவதற்கு பிரம்மத்தைத்தவிர வேறு அதிஷ்டாதாயிலலாதபடியால் அதையே கர்த்தாவென்றும் புருஷனென்றுஞ் சொல்வார்கள். வேறு உபாதானமில்லாதபடியால் அதையே பிரகிருதியென்றும் சொல்லுவார்கள். ஆகையால் புருஷோத்தமனாகிய விபக்தமூர்த்தியே புருஷனாகவும் பிரகிருதியாகவும் தோன்றினான். பரப்பிர்ம்மமும் வியக்தபுருஷனும் இந்திரியங்களற்ற ஸ்வரூபம் அமூர்த்தமென்று சொல்லுவது வழக்கம். இது முக்தஸ்வரூபம், இதுவேபரமென்று சொல்லப்படுகிறது. ஹிரண்ணியகர்ப்பன், ருத்

திரன், சூரியன், நக்ஷத்திரங்கள், சகலகிரகங்கள், மிருகங்கள் பக்ஷிகள், தேவதைகள் யாவும் மூர்த்தஸ்வரூபமென்றும் பத்தஸ்வரூபமென்றும் அபரமென்றுஞ் சொல்லப்படுவதுண்டு. முக்தஸ்வரூபனான மேற்சொன்ன புருஷோத்தமனிடமிருந்து புருஷப்பிரகிருதி உண்டாயிற்று. இதற்கே சிலர் ஈசுவரனென்றும் பிரத்தியகாத்மாவென்றுஞ் சொல்லுவார்கள். இது பிரகிருதியும் புருஷனும்கூடிய அவஸ்தையாம். பிரம்மாண்டத்திற்கு நிமித்தகாரணம் சைதன்னியமாகிய புருஷனும் உபாதானகாரணம் பிரகிருதியுமாகின்றன. இவைகள் இரண்டும் சேர்ந்திருக்கும் ஸ்திதிக்குத்தான் ஈசுவரனென்றும் புருஷப்பிரகிருதியென்றும் சொல்லுகிறார்கள். இந்த புருஷனும் பிரகிருதியும் புருஷப்பிரகிருதியின் இரண்டு வியக்தத்தோற்றங்கள். இதில் புருஷன் சைதன்னிய ரூபமாயிருந்துகொண்டு மன்வந்தராரம்பத்தில் தனது லயஸ்திதியைவிட்டும் முடிவில் லயத்தையுமடைகிறான். இவன்தான் ஞாதாவென்றும் க்ஷேத்திரக்ஞன் என்றும் சொல்லப்படுகிறான். மற்றவைகள் யாவும் இவன் பிரதிபிம்பங்கள். அப்புருஷனே ஸச்சிதாநந்தஸ்வரூபி. இவனையறியவேண்டியதற்கும் அடையவேண்டியதற்குமே சகலபதங்களும் ஒவ்வொரு பதங்களின் பிரிவுக்குத்தக்கபடி அனுஷ்டானங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இப்பேர்ப்பட்ட ஈசுவரனுக்குங்கூட பிரம்மம் ஸ்வயமாக அதாவது தான் உள்ளபடி காணப்படாமல் ஒரு (மறைபு, அல்லது திரை) யால் மூடப்பட்டதுபோல் காணப்படுகிறான். அந்த மூட்டத்திற்குத்தான் மூலப்பிரகிருதியென்று பெயர். அதன் ஸ்வரூபத்தை நாம் உள்ளபடியறியமுடியாது. ஸமஸ்தத்திற்கும் உபாதான காரணம் இந்த மூலப்பிரகிருதியேயாகும். புருஷன சச்சிதானந்த ஸ்வரூபியா யிருப்பதுபோல இப் பிரகிருதியும் ஸத்துவ ரஜோ தமோ குணங்களோடு கூடியது. அதாவது அம்மூன்று ஸ்திதியையுடையது

மன்வந்தராரம்பத்தில் பரப்பிரம்மம் ஈசுவரனாகவும்பிரகிருதியாகவும் தோற்றிய பிறகு தன் சக்தியை ஈசுவரன் மூலமாய் வெளிப்படுத்துகிறது. சூரியனுடைய தேஜஸ்ஸானது சூரிய

னில்லாத காலத்திலிருந்தாலும் சூரியன் உதயமானபிறகுதான் சூரியன் மூலமாக வெளியாவதுபோல பரப்பிரம்மத்தின் சக்தியும் ஈசுவரன் மூலமாக வெளிப்படுகிறது. இந்த சக்திக்குத்தான் பராசக்தியென்றும் தெய்விப் பிரகிருதியென்றும் பகவத்கிதையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த தெய்விப்பிரகிருதியின் பிரகாசம் உஷ்ணம் மூலப் பிரகிருதியிற்படவே இது விகாஸத்தை யடைந்தது. ஈசுவரனுடைய மனதில் இனியுண்டாகப் போகிற பிரம்மாண்டத்தினுடைய பாவனையுண்டாகிறது. இந்த பாவனை முழுமையும் ஈசுவரனுடைய பராசக்தியாகிய தெய்விப் பிரகிருதி கிரகித்து மூலப்பிரகிருதியினிடம் சேர்ப்பித்துவிடுகிறது. இப்படி தெய்விப் பிரகிருதி ஈசுவரனிடம் பாவனையை கிரகித்தவுடனே மூலப்பிரகிருதி விகாஸத்தையடைந்து அந்த பாவனையை கிரகித்துக்கொள்ளுகிறது. உடனே பிரம்மாண்டம் வெளிப்படுகிறது. மண்ணினால் செய்யப்பட்ட கட முதலியவைகளுக்கு சக்கரம், தண்டம் முதலியவைகள் குயவனுக்கு எப்படி ஸாதகமோ அதைப்போலவே பிரம்மாண்டத்தைப் பிரகிருதியினிடமிருந்து உண்டுபண்ணுவதில் தெய்விப்பிரகிருதி ஈசுவரனுக்கு சாதகமாயிருக்கிறது. ஆகையால் இந்த பிர்ம்மாண்டமானது ஈசுவரன் தெய்வீகப்பிரகிருதி மூலப்பிரகிருதி முதலியவைகளிடத்தில் காரணம் ஸூக்ஷ்மம், ஸ்தூலம் முதலிய ஸ்திதியிலிருந்ததாகவே எண்ணலாம்.

இந்தப் பிரம்மாண்டம் 7 வித ஸ்திதியிலமைந்து நிற்கிறது. அதாவது 7 வித விகாரத்தோடு கூடியிருக்கிறது. அந்த ஏழுவித அவஸ்தைகளுக்கும் 7 லோகங்கள் என்று பெயர். அவைகளில் முதல் லோகமானது ரொம்ப லேசான நுண்ணிய பிரகிருதி அணுக்களால் ஆகியது. இதில் ஈசுவர சைதன்னியம் வெகு ஜாஸ்தியாயுள்ளது, இதற்குத்தான் ஸத்தியலோகமென்று சொல்வது. 2-வது லோகமானது முதல் லோகத்தைவிட சற்று தடித்த பிரகிருதி அணுக்களாலாகியது. ஈசுவர சைதன்னியமும் கொஞ்சம் குறைந்துதான் நிற்கிறது. இதுவே தபோலோகம் இதற்கடுத்த லோகமானது பின்னும் கொஞ்சம் தடி

த்த பிரகிருதியணுக்களா லாகியது. ஈசுவர சைதன்னியமூ பின்னும் கொஞ்சம் குறைந்துதான் நிற்கிறது. இம்மூன்று லோகங்களும் அரூபமாயும் கடைசி 4 லோகங்களும் ரூபமாயுமிருக்கின்றன. ரூபலோகங்களும் அரூபலோகங்களைப்போலவே கொஞ்சங்கொஞ்சமாய் பின்னும் தடித்த பிரகிருதியணுக்களால் அமைக்கப்பட்டு ஸ்தூலாவஸ்தையில் மென்மேலும்விர்த்தியாய்க் கொண்டு வந்திருக்கின்றன. இப்படி ரொம்பவும் ஸ்தூலாவஸ்தையை யடைந்த லோகந்தான் நமக்கு கோசரமான பூலோகம். எப்படி ஸ்தூலமாய்க் காணப்படுகிற பனிக்கட்டியானது ஜலமாயும், ஆவியாயும் பின்னும் ஸ்தூலக்கண்ணுக்குப் புலப்படக் கூடாததாயுள்ள அதி சூட்சுமமான விகாரங்களை யடைகிறதோ அதைப்போலவே நமது பிரம்மாண்டத்தின் 7 லோகங்களின் விகாரங்களையும் கிரகிக்கவேண்டும். தவிரவும், முதல் லோகம் சுத்த சைதன்னிய ஸ்வரூபம். அதின் உபாதியாகிய புத்தி 2-வது லோகத்தில் பிரபல்லியமாய் விளங்குகிறது. இந்த புத்தியன்றியில் அந்த சைதன்னிய ஸ்வரூபத்தை யறிய வொருவராலும் அசக்கியம். 3-வதுலோகம் மானஸிகம்- இதில்தான் ரூபம் வியக்தமாய் முதல் முதல் காணப்படுகிறது. பிரகிருதி இந்த விடத்தில் தான் முதல் முதல் உருவத்தோடு கூடியிருக்கிறது. இவ்விடத்தில் ஆத்மா பிரத்தியக்ஷ ஸ்வரூபனாக வெளிப்பட்டுதான் அறியவேண்டிய பொருளை யபேட்சிக்கிறான். 4 வது லோகம் சரீர சம்பந்தமான இச்சைகள். இவைகள் இவ்விடத்தில் ரூபங்களோடு கூடியிருக்கின்றன. 5-வது பூமி பிராண லோகம் 6-வது பூமி நமதுஸ்தூலத்தைவிட சற்று லேசான பதார்த்தங்களால் ஆகியது. 7-வது தான் நமது ஸ்தூல பூலோகம்.

இவைகளில் பூ, புவர், சுவர் ஆகிய மூன்று லோகங்களும் கல்பந்தோறும் உண்டாக்கப்படுகின்றன, ஜன, தப, ஸத்திய லோகங்கள் அவ்வாறு உண்டாக்கப்படுவதில்லை. மகர்லோகமோ வென்றால் மேல் மூன்று லோகங்களுக்கும் கீழாகவும் கீழ்மூன்று லோகங்களுக்கும் மேலாகவுமிருக்கிறது. அதில் கல்ப முடிவில் ஜன சூன்னியமாவதைத் தவிர லோகம் நசிப்பதில்லை, ஒவ்வொரு

லோகத்திற்கும் ஞானம் அஞ்ஞானமாகிய இரண்டுவித தசைக ளிருப்பதால் லோகங்கள் மொத்தத்தில் 14 ஆகின்றன.

| | கீழ் 7 லோகங்கள். | மேல் 7 லோகங்கள். | |
|---|---|---|---|
| (1) | அதள | ஸத்திய | (1) |
| (2) | விதள | தபோ | (2) |
| (3) | சுதள | ஜன | (3) |
| (4) | தலாதள | மஹர் | (4) |
| (5) | ரஸாதள | சுவர் | (5) |
| (6) | மஹாதள | புவர் | (6) |
| (7) | பாதாள | பூ | (7) |

இதில் அதள முதல் பாதாளலோகம் வரையில் பிரகிருதியி னணுக்கள் அதிசூட்சுமமும் லேசான ஸ்திதியிலிருந்து கொஞ் சம் கொஞ்சமாய் விர்த்தியாகி பூலோகத்தில் நன்றாய் தடித்து நின்றது. அவைகளுக்குள் பிரவேசித்து உள்ளும் புறமும்பரவி பிரவகித்துவரும் ஈசுவர சைதன்னியமானது வர வர வெகு தடித்த பிரகிருதி அணுக்களால் மூடப்பட்டபடியால் ஈசுவரனு டைய பூர்ண சக்தியோடும் வித்துரூபமாய் ஸ்தாவராதி முதலிய வைகளில் இருப்பதுபோல் அமைந்து நின்றது. இந்த தசை க்குத்தான் அவித்தை அல்லது அஞ்ஞான தசையென்று பெயர். இதனால்தான் சகல சம்சார தாபங்களும் ஏற்படுகிறது. இப் படி பிரகிருதியால் மூடப்பட்டால்தான் சம்சாரம் தாரதம்மிய முள்ளதாகவும் காணப்படுகிறது. எப்படியென்றால் அசேதனங் களில் அந்த சக்தி மிகவும் அற்பமாயும் தாவரங்களில் அதற்கு கொஞ்சம் அதிகமாயும் ஊரும் ஜந்துக்களில் அதற்கு மேற்பட்ட தாயும் இவ்வாறே பக்ஷி மிருகங்கள் பசுக்கள் மனிதர் நாக கந்தர்வ யக்ஷாதி தேவதைகள் முதலியவர்களிடம் அந்த சக்தி கிரமேண அதிகமாயும் காணப்படுகின்றது. பூலோகம் வரையில் வெகு தடித்த பிரகிருதி யணுக்களால் மூடப்பட்டு வந்த ஈசுவரசைதன்

ணியமாகிய அந்த சக்தியானது மேற்சொன்ன பிரகாரம் தாவர முதல் தேவதாதி ஸ்வரூபங்கள் வரையில் பிரகிருதியிலிருந்து விடுவித்துக்கொண்டு முடிவில் தன் நிலைமையடைகிறது. லோகங்கள் இதிற்கண்டபடி வரிசையாய் ஒன்றின் கீழ் ஒன்றிருப்பதாக எண்ணக்கூடாது. மேல் லோகங்கள் ஒவ்வொன்றும் கீழ் லோகங்களில முறையே சம்பந்தப்பட்டு ஊடுருவி உள்ளும்புறமும் பின்னப்பட்டிருக்கிறது. பிரகிருதியின் சூட்சும அல்லது தடித்தஸ்திதிலும் சைதன்னிய விகாஸத்திலுந்தான் வித்தியாசம். ஆகையால்தான் ஒவ்வொரு லோகத்தின் விகாஸ அவஸ்தையின் குணங்கள் வெவ்வேறென்று சொல்லப்படுகிறது. நம்முடைய சூரியமண்டலத்திலுள்ள செவ்வாய் புதன் முதலிய கிரகங்களுக்கு 7 அவஸ்தைகளிருப்பதுபோல நமது பூலோகத்துக்கும் 7 அவஸ்தைகளுண்டு. இந்த அவஸ்தைகளுக்கு துவீபங்களென்று சொல்லப்படுகிறது. பூமியின் தற்கால அவஸ்தைக்கு ஜப்புதுவீபமென்று பெயர். இவ்வேழும்சேர்ந்துதான் கிரகமாலிகை என்று சொல்லப்படுகிறது இவ்விடத்தில் அவஸ்தைகள் அல்லது ஸ்திதி யென்று சொல்லுவது பிரக்ஞாபேதத்தைத்தவிர வேறு ஒன்றுமில்லை. அவைகளையும் அவைகளிலுள்ள ஜீவர்களின் நிலைமையையும் அறிவதற்கு ரொம்பபக்குவிகளுக்குத்தான் முடியும்.

நமது பூலோகத்திற்கு ஏழு ஸ்திதியென்று சொன்னோம். அவைகளில் முதலாவது ஸ்திதி யேற்பட்ட சிலகாலம் சென்று 2-வது ஸ்திதியும் அதற்கு சிலகாலம் சென்றபிறகு 3-வது ஸ்திதியும் இவ்வாறே முறையே 7 ஸ்திதிகள் ஏற்படுகின்றன. இவைகளில் சைதன்னியம் வரிசையாய் ஏழுதரம் சுற்றிவருவதற்கு ஒரு சுற்று என்றுபெயர். இப்படி ஏழுதரம் சைதன்னிய சுற்றுவந்தபிறகு இதர கிரகங்களுக்கு சைதன்னியம் ஓடுகிறது. அப்பொழுது இந்த கிரகத்திற்கு நாசம் அல்லது பிரளயம் ஏற்படுகிறது. முதல் மூன்றுசுற்றுகளில் இந்த பூமியானது ரூபத்தைபடைந்து 4 வது சுற்றில் ஸ்திரப்பட்டு 5 முதல் 7 சுற்றுக்களில் மறுபடியும் கிரமேண சூட்சுமதசையை அடைகிறது. ஈசுவரசைதன்னியமானது முதல் முதல் மூன்றுவிதமான திருஷ்டிக்குப் புலப்படக்கூடாத பௌதிகரூபங்களிலும் (elemental

essence) பிறகு பாஷாணங்களிலும் (minerals) பிறகு கந்த மூலங்களி (vegetables)லும் பிறகு மிருகங்களி (animals) லும் பிறகு மனிதர்களிலும் பிரவேசித்து விளங்குகிறது. இது தான் சிருஷ்டி முறையென்று சொல்லப்படுகிறது. இந்த சிருஷ்டி முறையையே அநேகர்கள் அநேகவிதமாய்ச் சொல்லுவார்கள். உண்மையில் பரப்பிரம்மத்தின் சுத்தசைதன்னியமே பற்பலரூபங்களைத் தரிக்கிறது. ஏற்கனவே சொல்லியபடி சைதன்னியமானது ஸ்தாவர கந்தமூல சிருஷ்டியில் விகாஸத்தையடையாமல் மிருகசிருஷ்டியில் பிரஜ்ஞை வெளிப்பட்டு உணர்ச்சி இச்சைகள் வெளிப்பட்டும் மானிட சிருஷ்டியில் சகலமனோதர்மங்களும் நன்றாய் விளக்குகிறது.

முந்தி சொல்லிய ஒவ்வொரு சுற்றையும் ஒவ்வொரு கல்பமாகச் சொல்லலாம். முதலாவது கல்பத்தில் சைதன்னியமானது பாஷாணம் கந்தமூலம் முதலியவைகளிலும் 2 வது கல்பத்தில் மிருகங்களிலும் 3 வது கல்பத்தில் மனிதனிடம் பிரவேசித்து 4-வது கல்பமாகிய இந்த பிரகிருத கல்பத்தில் மனிதன் இந்த ஆகாரத்தை யடைந்திருக்கிறான். இனி வரப்போகிற மூன்று கல்பங்களிலும் மனிதன் சூட்சும ஆகாரத்தையடைந்து தெய்வரூபத்தைத் தரிப்பான். மானிடவர்க்கங்கள் முக்கியமாய் 7. அவைகள் ஒவ்வொன்றுக்கும் 7 உட்பிரிவுகளுண்டு. அந்த உட்பிரிவுகளும் அவ்வாறே பிரிந்து நிற்கின்றன. இப்போது இருக்கும் வர்க்கம் 5-வது. ஒவ்வொரு வர்க்கத்திலும் ஒவ்வொரு அம்சம் பக்குவமாகிறது. இப்போது நாம் 5-வது வர்க்கத்திலிருக்கிறோமாகையால் 5-வது அம்சமாகிய மனது விகாசத்தையடைந்து வருகிறது. இதற்கு சாக்ஷி ஒவ்வொரு தேசத்தார்களையும் அவரவர்கள் மனோபாவங்களையும் இப்பொழுது கவனித்தால் நன்குவிளங்கும். இனி 6, 7 வர்க்கங்களில் மேல் 2 அம்சங்கள் நன்றாய் விருத்தியடையும்.

மனிதனுக்கு 7 அம்சங்களையும் கொடுப்பது பிதுர்தேவதைகள் ரூப சம்பந்தப்பட்டவைகளைக் கொடுப்பது பர்ஹிஷத் பிதுர்

க்கள். ரூபமில்லாதவைகளைக் கொடுப்பது அக்கினிஷ்வத் பிதுர்க்கள். மானிடசரீரம் பர்ஹிஷத் பிதுர்க்களால் உண்டாயிற்று. இவர்கள் தங்கள் சாயையை பிரித்துக்கொடுத்தவர்களாதலால் முதல் வர்க்கத்தவர்களுக்கு சாயாஜர்கள் என்று பெயர். விசுவகர்மாவினுடைய பெண் சஞ்ஞா என்பவள் புருஷனாகிய சூரியனையடையமுடியாமல் தன் சாயையைப் பிரித்துக்கொடுத்ததாக விஷ்ணுபுராணத்தில் சொல்லியிருப்பது இந்தமுதல் சாயாஜவர்க்கத்தைத் தான் குறிப்பிடுகிறது. அக்கினிஷ்வத் பிதுர்க்கள் இந்த வீடுகளில் பிரவேசிக்கும் வரையில் இந்த வீடுகள் ஜடங்களாயிருந்தன. ஸ்திரீபுருஷவித்தியாஸமற்ற சரீரமாகவுமிருந்தன. இந்த முதல்வர்க்கத்தினின்று இரண்டாவது வர்க்கமுண்டாயிற்று. முதல் வர்க்கத்தினர்கள இதில் ஈடுபட்டார்கள். 3-வது வர்க்கம் சுவேதஜமாயிருந்தது. பிர்மலோசனையினுடைய சுவேதத்திலிருந்து மரீசியென்னும் பெண் பிறந்ததாக விஷ்ணுபுராணத்தில் சொல்லியிருப்பது இந்த சுவேதஜ வர்க்கத்தைத் தான் காண்பிக்கிறது 3-வது வர்க்கத்தினின்றும் 4-வது வர்க்கம் ஜனித்தது. 3-வது வர்க்கமும் இதில் ஈடுபட்டது. 4-வது வர்க்கத்தில் மனிதனுடைய உருவம் முதலில் அண்டஜமாயிருந்து பிறகு ஜராயுஜமாக ஆயிற்று.

முதலில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களில்லாமலும் பிறகு இந்த இரண்டு லக்ஷணங்களும் ஒரே சரீரத்தில் காணப்பட்டும் பிறகு வேறு சரீரங்களில் தோன்றவுமாரம்பித்தன. இவ்விதமாய் மானிட தேகம் பக்குவமாய்க் கொண்டு வருகையில அக்னிஷ்வத் பிதுர்க்கள் கண்டு தங்கள் அபிவிர்த்திக்கு இச்சரீரங்களே தக்கவைகளென்று எண்ணி $2\frac{1}{2}$ கல்பங்களுக்குப் பிறகு $3\frac{1}{2}$ கல்பங்கள் வரையில் பிரவேசித்து வந்து பிறகு நின்று விட்டார்கள் இவர்களுடைய பிரவேசத்திற்குப் பிறகுதான் அநேக மிருக மானிடர்கள் மானிடர்களானார்கள் அந்த அக்கினிஷ்வத்பிதுர்க்களுக்கு மானஸ புத்திரர்களென்று சொல்வதுண்டு. சிலர்கள் சரீரத்தில் பூராவாக பிரவேசித்தும் சிலர் ஒரு அம்சத்தை மட்டிலும் பிரவேசிக்கும்படி செய்தார்கள்.

நாம் இப்போது 4 வது கல்பத்தில் 5 வது வர்க்கத்திலிருக்கிறோமென்று சொல்லப்பட்டது. ஜீவ கோடிகள் இதற்கு

ப்பிறகு 6, 7, வர்க்கங்களில் பிரவேசித்துப் பிறகு 5,6,7, கல்பங்களிலும் முறையே 1 முதல் 7 வர்க்கங்களிலும் பிரவேசித்து கடைசியில் மோக்ஷத்தையடைவார்கள். சூரிய மண்டலத்திலுள்ள பின்னும் அனேக கிரகபாலிகைகளும்மேற்சொல்லியபடியே மாறுதல்களை யடைந்து முடிவில் தான் சூரியமண்டலம் பிரளயத்தை யடையும். அனேக சூரியமண்டலங்களி லிருப்பதாலும் அவைகளெல்லாம் மேற்சொல்லியவண்ணமே மாறுதல்களையடைந்து பிரளயமான பிற்பாடுதான் மகாப்பிரளயம் ஸம்பவிக்கும். அப்பொழுது பிர்ம்மம் மாத்திரம் பாக்கியாக நிற்கும்.

இதன் விபரம் பிரம்மவித்தியா சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளின் விவரங்கள் பூராவும் வெளியாக்கப்படவில்லை. வெளியாக்கின வரையில்கூட இதில் பிரஸ்தாபிப்பது அஸாத்தியம். ஆகையால் மனிதன் வெருகாலம் பந்தங்களுக்குள்ளாகாமல் தன்னை பந்தத்தினின்று நிவர்த்தித்து மோக்ஷத்தை யடைவதற்குவேண்டிய உபாயங்களைத் தேடவேண்டும். அதற்கு பின்வரும் கேழ்விகளுக்கு மறுமொழிகளைத் தெரிந்துகொண்டு அதற்குத்தக்கபடி நடக்கவேண்டுவதே. அவையாவன:—(1) நான்யார்? (2) எங்கிருந்துவந்தேன் (3) எங்கு செல்லவேண்டும்.? (4) வந்தகாரியமென்ன? (5) போவதற்குச்செய்துகொள்ளவேண்டிய சாதனங்களும் இடையூறுகளாய் நிற்கும் பாதகங்களும் யாவை? (6) மரணத்திற்குப்பின் நடக்கும் விஷயங்கள் என்ன? (7) புனர் ஜன்மம் உண்டா இல்லையா? என்ற ஏழுகேள்விகளுக்கும் முறையே விசாரிப்போம்.

ஓம்தத்ஸத்.

---